**MINUTES OF THE PUBLIC HEARING MEETING CONDUCTED FOR OBTAINING EVIRONMENTAL CLEARANCE FROM STATE ENVIRONMENT IMPACT ASSESSMENT AUTHORITY (SEIAA) - TAMIL NADU FOR THE PROPOSED ROUGH STONE & GRAVEL QUARRY OF M/s. M.N.BALASUNDARAM ROUGH STONE & GRAVEL QUARRY, OVER AN EXTENT OF 3.87.5 HECTARES LOCATED IN S.F.Nos. 8/1A, 8/1B, 8/1C, 8/1D, 8/1E, 8/1F, 8/1G, 8/1H, 8/1I, 8/1J, 8/1K, 8/1L, 8/1M, 8/3A & 8/3B, OF SITHALAPAKKAM VILLAGE, VEMBAKKAM TALUK, TIRUVANNAMALAI DISTRICT, HELD ON 07.01.2025 AT 1.00 PM IN M/s. R.S.E MAHAL, MAMANDUR, VEMBAKKAM TALUK, TIRUVANNAMALAI DISTRICT.**

Present:

| | | |
|---|---|---|
| 1. | Thiru. Baskara Pandiyan, IAS., | District Collector, Tiruvannamalai. |
| 3. | Tmt. T. Kalaiselvi | District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Tiruvannamalai. |
| 3. | Thiru. K. Prem Kumar | Assistant Engineer, Tamil Nadu Pollution Control Board, Tiruvannamalai. |
| 4. | Selvi. R. Vijayashree | Assistant Engineer, Tamil Nadu Pollution Control Board, Tiruvannamalai. |
| 5. | Thriu.K. Perumal | Tashildar (i/c), Vembakkam Taluk, Tiruvannamalai. |
| 6. | Thiru.M. Haridas | Village Administrative officer, Sithalapakkam village, Vembakkam Taluk. |
| 6. | Tmt. A. Amutha | Assistant Manager, Tamil Nadu Pollution Control Board, Tiruvannamalai. |
| 5. | Public and Environmentalists | 54 persons (list enclosed). |

The District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Tiruvannamalai, on behalf of the Tamil Nadu Pollution Control Board has welcomed the District Collector, Tiruvannamalai who presided the public Hearing meeting, the Government officials, the public, the environmentalists and explained the need of the public Hearing for obtaining Environmental Clearance for the proposed rough stone and gravel quarry as follows.

"As per the Environmental Impact Assessment Notification 2006 all the projects and activities listed in the schedule to the notification, require prior Environmental Clearance from the State Environment Impact Assessment Authority (SEIAA). The Environmental Clearance process involves public consultation, which is why the public hearing meeting is being conducted for the proposed Rough stone and Gravel Quarry project by M/s. M.N.Balasundaram. This project aims to quarry rough stone and gravel over an extent of 3.87.5 hectares in Sithalapakkam Village, Vembakkam Taluk, Tiruvannamalai District.

As per EIA, 2006 the mining projects (Individual or Cluster extent) above 5 hect of that area requires prior Environmental Clearance from the State Environment Impact Assessment Authority. Accordingly, this public hearing meeting will be recorded and submitted in the form of audio and video to the State Environment Impact Assessment Authority. Accordingly, the public notice for this public hearing was published in dailies of "Times of India" (English) & "Dinamalar" (Tamil) on 28.11.2024 with the approval of the District Collector, Tiruvannamalai for the proposed Rough stone & gravel quarry of M/s. M.N.Balasundaram.

The District Environmental Engineer, further stated that the proposed quarry project and its Environmental Impact Assessment Study report details will be explained through a power point presentation by the project proponent's consultant. Following the presentation, the public can express their views, suggestions, and comments one by one either in oral or in written format on the said project. The opinions & suggestions of the public & environmentalists will be recorded and submitted to the State Environment Impact Assessment Authority."

The District Collector, Tiruvannamalai requested the project proponent to explain about the proposed rough stone & gravel quarry and the Environmental Impact Assessment study conducted by them to the public in detail.

On behalf of the project proponent, Tmt. K. Abirami, Coordinator, M/s. Global Mining Solutions, Salem (Consultant for the proposed rough stone & gravel quarry of M/s. M.N.Balasundaram) explained the details of the project and the Environmental Impact Assessment study conducted by them with help of power point presentation.

Then the District Collector, Tiruvannamalai requested the public to express their views/suggestions/comments in oral or written statement one by one and instructed the participants to provide their name and address before sharing their feedback, and to do so one by one, to ensure an orderly & transparent process.

The following are the views/suggestions/comments represented by the public.

**1. Thiru. Thulasi, Sithalapakkam village:**

He expressed his **opposition against the proposed quarry** of M/s. M.N.Balasundaram. It was stated by him that this quarry would lead to the silting of canals that supplied water to the lake, severely affecting agriculture and grazing for cattle, resulting in animal deaths and the blocking of wells. No officials have investigated this matter. The proposed quarry would affect 50 acres of agricultural land, severely impacting farmers; the natural resources of our village would be affected and hence, he respectfully requested the District Collector to refrain from allowing the establishment of this quarry.

**2. Thiru. Perumal, Sithalapakkam village:**

He stated that the wastewater from the proposed ordinary stone and gravel quarry by Thiru M.N. Balasundaram would mix with the lake water, severely affecting the livestock, such as goats and cattle. Furthermore, agriculture would be greatly impacted; wells would be silted; and the canal water supply would be disrupted. Our village lake would also be polluted. He added that the quarry operators do not follow any regulations when blasting rocks, and they do so at all hours, day and night, without any prior notice.

The vibrations from the blasting cause wells to collapse and get silted. He respectfully requested the Honourable District Collector to inspect and investigate our village's canal, lake, and lands before granting permission for the quarry, thus concluding his speech by **expressing his opposition** to the proposed quarry.

**3. Thiru. Vinayagam, Arasanipalaiyam village:**

He stated that the previous speaker mentioned that canals and wells in the village were affected by the quarry operations, but instead of approaching the concerned authorities, they were criticizing the quarry owner, which is not justified. He concluded his speech by stating that the proposed quarry would not have any adverse impact on their village.

**4. Thiru. Sankar, Arasanipalaiyam village:**

He stated that the proposed quarry would not have any adverse impact on their village and concluded his speech by **expressing his support** for the proposed quarry project.

**5. Thiru. Thirunavukkarasu, Arasanipalaiyam village:**

He stated that the establishment of this quarry would improve the livelihoods of more than 200 families. Therefore, they are pleased with the proposed quarry and he concluded his speech by **expressing his support** for the proposed quarry project.

**6. Thiru. Mohan, Arasanipalaiyam village:**

He stated that the establishment of this quarry has created job opportunities for the people of our village, and bus facilities have also been made available, resulting in numerous benefits. He concluded his speech by **expressing his support** for the project.

**7. Tmt. Rani, Arasanipalaiyam village:**

She stated that no objections to the establishment of the quarry since the proposed quarry would not have any adverse impact on their village, and her speech was concluded by **expressing support** for it.

**8. Tmt. Vijaya, Arasanipalaiyam village:**

She stated that she has been working in this quarry for 15 years and the quarry owner has done numerous good deeds for them. She added that their children are studying in school today because of the quarry owner. She further stated that the quarry has not had any adverse impact on their daily lives and her speech was concluded by **expressing support** for the proposed quarry.

**9. Thiru. Vishal Kumar, Arasanipalaiyam village:**

He stated that this quarry has provided employment opportunities to numerous young people who were wandering around without jobs, and several families who struggled to make sustain themselves. Additionally, this quarry has provided various amenities to our village. Therefore, we have no objections to the establishment of this quarry, and he concluded his speech by **expressing his support** for the project.

**10. Tmt. Alamelu, Arasanipalaiyam village:**

She stated that she has been working in this quarry for 15 years and the economic status of her family has improved because of this quarry. Therefore, she welcomed the quarry and expressed her support for its establishment, and concluded her speech by **expressing her support** for the project.

**11. Thiru. Parthiban, Arasanipalaiyam village:**

He stated that this quarry has not had any adverse impact on their village people. They have no objections to the establishment of this quarry, and he concluded his speech by **expressing his support** for the project.

**12. Thiru. Umapathi, Sithalapakkam village:**

He questioned that, as previously mentioned, how a quarry can provide livelihoods for around 200 people? In our village, Sithalapakkam, there is a rough stone and gravel quarry owned by Thiru. M.N. Balasundaram. Near this quarry, there's a large lake spanning 60 acres.

However, due to the quarry's operations, the lake is severely affected. Our village has not benefited from this quarry; we lack access to drinking water, and our roads remain undeveloped. Compared to other villages, Sithalapakkam is heavily impacted. Therefore, before establishing this quarry, a thorough environmental impact assessment and soil testing should have been conducted in our village. Instead, the project report was submitted without proper research. Thus, I request the honourable District Collector to investigate and only then grant permission for the quarry's establishment.

**13. Thiru. Siva, Sithalapakkam village:**

He stated that the previous speaker mentioned the adverse effects of this quarry. However, my agricultural land is located near this quarry. I have not been affected by the establishment of this quarry. The well near my field has also not been affected and concluded his speech by **expressing support** for the proposed quarry.

**The following 06 members of the public have expressed their opinion in writing on the proposal of this Rough stone and Gravel quarry. Among the 06 members, 04 members have expressed their support and 02 members have expressed their objection to the operation of this quarry.**

| S.No | Name& Place | Comment |
|---|---|---|
| 1 | Village people, Sithalapakkam and Arasanipalaiyam village, Tiruvannamalai District. | Expressed support in favour of the proposed quarry |
| 2 | Thiru.S. Santhakumar, Ex-Village president, Suruttal village, Tiruvannamalai District. | Expressed support in favour of the proposed quarry |
| 3 | Thiru. M. Muthu Raja, Ramanathapuram District. | Expressed support in favour of the proposed quarry |
| 4 | Thiru.S.Kanchana Charry, Rangareddy District, Telegana. | Expressed support in favour of the proposed quarry |

| | | |
|---|---|---|
| 5 | Thiru.V.Perumal,<br>Sithalapakkam Village,<br>Tiruvannamalai District. | Expressed objection against the proposed quarry. |
| 6 | Thiru. V. Thulasi,<br>Sithalapakkam Village,<br>Tiruvannamalai District. | Expressed objection against the proposed quarry. |

As there were no views/comments raised further, District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Tiruvannamalai, with the District Collector's approval, has announced that the meeting came to an end with the vote of thanks.

**Enclosures:**

1. Copy of press release (Public Notice published in the daily Newspaper Tamil & English dated 28.11.2024 for notifying the public hearing meeting)
2. The certificate issued by the Village Administrative Office for the Audio announcement and issue of notices.
3. Attendance sheet at the public hearing (Total pages 07 & 54 persons).
4. Audio & Video (DVD – Disc 1) of the public hearing proceedings.
5. Photographs of the public hearing/Summary in English & Tamil, submitted by the Project Proponent.
6. EIA Report & Executive summary (Tamil & English).
7. Petitions received through Public Hearing Meeting and social media- 06 numbers.

13/1/2025

**District Environmental Engineer,**
**Tamil Nadu Pollution Control Board,**
**Tiruvannamalai.**

1/20/2025

**District Collector,**
**Tiruvannamalai.**

(4/6)

**<u>திருவண்ணாமலை மாவட்டம், வெம்பாக்கம் வட்டம், சித்தாலப்பாக்கம் கிராமத்தில் புல எண்கள். 8/1A, 8/1B, 8/1C, 8/1D, 8/1E, 8/1F, 8/1G, 8/1H, 8/1I, 8/1J, 8/1K, 8/1L, 8/1M, 8/3A & 8/3B–ல் 3.87.5 ஹெக்டேர் பரப்பளவில் உத்தேசிக்கப்பட்டுள்ள தி/ள். M.N. பாலசுந்தரம், சாதாரண கல் மற்றும் கிராவல் சுரங்கத்திற்கு மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்தின் சுற்றுச்சூழல் அனுமதி பெறும் பொருட்டு 07.01.2025 அன்று திருவண்ணாமலை மாவட்டம், வெம்பாக்கம் வட்டம், மாமண்டூரில் அமைந்துள்ள தி/ள். R.S.E மஹாலில் பிற்பகல் 1.00 மணியளவில் நடைபெற்ற பொதுமக்கள் கருத்து கேட்புரை கூட்ட அறிக்கை விபரங்கள்.</u>**

**பங்கேற்றோர்:**

**<u>திருவாளர்கள்</u>**

| | | |
|---|---|---|
| 1. | திரு.தெ. பாஸ்கர பாண்டியன், இ.ஆ.ப., | மாவட்ட ஆட்சித்தலைவர், திருவண்ணாமலை. |
| 2. | திருமதி. தி. கலைச்செல்வி | மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், திருவண்ணாமலை. |
| 3. | திரு. க. பிரேம் குமார் | உதவி பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், திருவண்ணாமலை. |
| 4. | செல்வி. இரா. விஜயஸ்ரீ | உதவி பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், திருவண்ணாமலை. |
| 5. | திரு.க. பெருமாள் | வட்டாட்சியர் (i/c), வெம்பாக்கம் வட்டம், திருவண்ணாமலை. |
| 6. | திரு.மு.அரிதாஸ் | கிராம நிர்வாக அலுவலர், சித்தாலப்பாக்கம் கிராமம், வெம்பாக்கம் வட்டம். |
| 5. | திருமதி. அ. அமுதா | உதவி மேலாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், திருவண்ணாமலை. |
| 6. | பொதுமக்கள் மற்றும் சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் | (54 நபர்களின் பட்டியல் இணைக்கப்பட்டுள்ளது) |

மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், திருவண்ணாமலை அவர்கள் பொதுமக்கள் கருத்துக் கேட்புக் கூட்டத்திற்கு தலைமை வகித்த மதிப்பிற்குரிய மாவட்ட ஆட்சித்தலைவர், திருவண்ணாமலை அவர்களையும், கருத்துக் கேட்புக் கூட்டத்திற்கு வருகை புரிந்த அரசு அதிகாரிகளையும், பங்கேற்ற பொதுமக்கள், சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் அனைவரையும் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தின் சார்பாக வரவேற்று உத்தேசிக்கப்பட்டுள்ள சாதாரண கல் மற்றும் கிராவல் குவாரிக்கு சுற்றுச்சசூழல் அனுமதி பெறும் பொருட்டு நடைபெற்ற பொதுமக்கள் கருத்து கேட்புக் கூட்டத்தின் அவசியத்தை பின்வருமாறு எடுத்துரைத்தார்.

"திருவண்ணாமலை மாவட்டம், வெம்பாக்கம் வட்டம், சித்தாலப்பாக்கம் கிராமத்தில், 3.87.5 ஹெக்டேர் பரப்பளவில் உத்தேசிக்கப்பட்டுள்ள திரு. M.N. பாலசுந்தரம், சாதாரண கல் மற்றும் கிராவல் சுரங்க நிறுவனமானது கற்களை வெட்டி எடுக்க மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்தின் சுற்றுச்சூழல் அனுமதி பெறும் பொருட்டு பொதுமக்கள் கருத்து கேட்புக் கூட்டம் இன்று நடைபெறுகிறது.

சுற்றுச்சூழல் பாதுகாப்பு சட்டம் மற்றும் சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு அறிக்கை 2006-ன்படி தனியாகவோ அல்லது கூட்டாகவோ 5.00 ஹெக்டர் பரப்பளவிற்கு மேல் பாறையிலிருந்து கற்களை வெட்டி எடுப்பதற்கு சுற்றுச்சூழல் அனுமதி பெற பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டம் நடத்தி பொதுமக்கள் மற்றும் சமூக நல ஆர்வலர்களிடம் கருத்துகளை எழுத்து மூலமாகவோ, வாய்மொழி மூலமாகவோ பெற்று அதனை ஒலி மற்றும் ஒளி பதிவு செய்து மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்திற்கு அனுப்ப வேண்டியது அவசியமாகும். இதுதொடர்பாக மாவட்ட ஆட்சியரின் ஒப்புதலின் திரு. M.N. பாலசுந்தரம், சாதாரண கல் மற்றும் கிராவல் குவாரிக்கு பொதுமக்கள் கருத்துக் கேட்புக் கூட்டம் திரு. R.S.E மஹாலில் 07.01.2025 அன்று பிற்பகல் 1.00 மணியளவில் நடைபெறுமென தினமலர் மற்றும் டைம்ஸ் ஆப் இந்தியா செய்தி தாள்களில் 28.11.2024 அன்று பொது அறிவிப்பு வெளியிடப்பட்டது.

இக்கூட்டத்தில் தொழிற்சாலை நிர்வாகத்தினர் தொடங்க உள்ள தொழிற்திட்டம் மற்றும் சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு சம்பந்தமான விவரங்களை தங்களுக்கு விரிவாக எடுத்துரைப்பார்கள். அதன் பின்னர் பொதுமக்கள் மற்றும் சமூக ஆர்வலர்கள் தங்களது கருத்துகளை எழுத்து மூலமாகவோ, வாய்மொழி மூலமாகவோ தெரிவிக்கலாம். அவ்வாறு தெரிவிக்கும் போது பொதுமக்கள் தங்கள் பெயர், ஊரின் பெயர் ஆகியவற்றை குறிப்பிட்டு தங்கள் கருத்துக்களை தெரிவிக்க வேண்டும். தங்களுடைய கருத்துக்களை முறையாக பதிவு செய்து மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்திற்கு அனுப்பி வைக்கப்படும். அதன் பின்னர் மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்தினர் இத்திட்டத்திற்கு சுற்றுச்சூழல் அனுமதி வழங்குவது குறித்து பரிசீலனை செய்வார்கள். தற்போது மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பொது மக்கள் கருத்து கேட்பு கூட்டத்தினை தொடங்கி வைப்பார்கள். அதன் பின்னர் தொழிற்சாலை நிர்வாகத்தினர் தொழிற்திட்டம் குறித்தும் நிர்வாகத்தினரால் தயாரிக்கப்பட்ட சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு அறிக்கை குறித்தும் தங்களுக்கு விரிவாக எடுத்துரைப்பார்கள்".

மாவட்ட ஆட்சித்தலைவர், திருவண்ணாமலை அவர்கள் சுரங்க நிர்வாகத்தினரை உத்தேசிக்கப்பட்டுள்ள தொழிற்திட்டம் குறித்தும் நிர்வாகத்தினரால் தயாரிக்கப்பட்ட சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு அறிக்கை குறித்தும் பொதுமக்களுக்கு விளக்கும் படி கேட்டுக்கொண்டார். மேலும் பொது மக்கள் கருத்து தெரிவிக்கும் போது தங்கள் பெயரை குறிப்பிட்டு கருத்து தெரிவிக்குமாறு கேட்டுக்கொண்டார்.

இதனைத் தொடர்ந்து திருமதி. கே. அபிநயா, ஒருங்கிணைப்பாளர், தி/ள். குளோபல் மைனிங் சொல்யுசன்ஸ், சேலம் (தி/ள். M.N. பாலசுந்தரம், சாதாரண கல் மற்றும் கிராவல் குவாரி திட்டத்தின் ஆலோசகர்) அவர்கள் நிழற்பட விளக்கக் காட்சி மூலம் உத்தேசிக்கப்பட்டுள்ள தொழிற்திட்டம் மற்றும் சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு அறிக்கை பற்றி விரிவாக எடுத்துரைத்தார்.

பின்னர், மாவட்ட ஆட்சித்தலைவர், திருவண்ணாமலை அவர்கள், பொதுமக்கள் தங்களுடைய கருத்துக்களை தெரிவிக்கலாம் என்று தெரிவித்தார்.

அதன்படி பொதுமக்கள் தங்களுடைய கருத்துக்களை கீழ்க்கண்டவாறு தெரிவித்தனர்.

1. <u>**திரு. துளசி, சித்தாலப்பாக்கம் கிராமம்**</u>

இவர் கூறுகையில், தி/ள். M.N. பாலசுந்தரம், சாதாரண கல் மற்றும் கிராவல் குவாரி அமைப்பதற்கு எனது எதிர்ப்பை இங்கு தெரிவிக்கிறேன். இந்த குவாரி அமைவதால் ஏரிக்கு வரும் வாய்க்கால் நீர் மண்ணால் மூடப்படுகிறது; இதனால் விவசாயம் பெரிதும் பாதிக்கப்படுகிறது; ஆடு, மாடு மேய்ச்சல் மிகவும் பாதிப்புக்கு உள்ளாகிறது; ஆடு மாடுகள் இறக்கின்றன; கிணறுகள் மண்ணால் மூடப்படுகின்றன. இதைக் குறித்து எந்த அதிகாரிகளும் ஆய்வு செய்யவில்லை. இந்தக் குவாரியை சுற்றி அமைந்துள்ள 50 ஏக்கர் விவசாய நிலங்கள் பாதிப்புக்கு உள்ளாகின்றன; இதனால் விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்படுகின்றனர்; இந்த குவாரி அமைவதால் எங்கள் கிராமத்தின் இயற்கை வளங்கள் பாதிக்கப்படுகின்றன; எனவே தயவு கூர்ந்து இந்த குவாரியை அமைக்க வேண்டாம் என்று மாவட்ட ஆட்சியரை வேண்டி கேட்டுக்கொள்கிறேன் என்று குவாரி அமைவதற்கு **தனது எதிர்ப்பை தெரிவித்துக் கொண்டு** உரையை முடித்துக் கொண்டார்.

2. <u>**திரு. பெருமாள், சித்தாலப்பாக்கம் கிராமம்**</u>

இவர் கூறுகையில், தி/ள். M.N. பாலசுந்தரம், சாதாரண கல் மற்றும் கிராவல் குவாரியின் கழிவு நீர் ஏரிகளில் கலப்பதால் ஆடு, மாடு போன்ற விலங்குகள் பெரிதும் பாதிப்புக்குள்ளாகின்றன. மேலும் விவசாயம் பெரிதும் பாதிக்கப்படுகிறது; கிணறு மூடப்படுகிறது; கால்வாய் வழியாக தண்ணீர் வருவதில்லை; எங்கள் ஊருக்கு என்று இருக்கும் ஒரு ஏரியும் மாசுபடுகிறது; குவாரிகளில் பாறைகளை வெட்டி எடுப்பதற்கு வெடி வைக்கும் போது அவர்கள் எந்த விதமான விதிமுறைகளையும் பின்பற்றுவதில்லை. இரவு பகல் என பாராமல் அனைத்து நேரங்களிலும் எந்தவித முன் அறிவிப்பும் இன்றி வெடி வைக்கின்றனர். அந்த அதிர்வினால் கிணறுகள் இடிந்து விழுந்து மண்ணால் மூடப்படுகின்றன. மதிப்பிற்குரிய மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் ஒருமுறை எங்கள் ஊர்

கால்வாய், ஏரி, நிலங்களை மேற்பார்வையிட்டு ஆய்வு செய்து பின்பு இந்த குவாரிக்கு அனுமதி கொடுப்பதா வேண்டாமா என்று முடிவெடுக்க வேண்டும் என்று அமையவிருக்கும் குவாரிக்கு **தனது எதிர்ப்பை தெரிவித்து** உரையை முடித்துக் கொண்டார்.

3. **<u>திரு. விநாயகம், அரசாணிப்பாளையம் கிராமம்</u>**

இவர் கூறுகையில், இதற்கு முன் பேசிய நபர் எங்கள் கிராமத்தில் கல்குவாரிகளின் செயல்பாட்டினால் கால்வாய்கள், கிணறுகள் மூடப்பட்டுவிட்டன என்று கூறினார். அவர் அதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகளை சென்று அணுகாமல் குவாரி உரிமையாளரை குறை கூறுவது எந்த விதத்தில் நியாயம்? இந்த குவாரி அமைவதால் எங்கள் ஊருக்கு எந்த விதமான பாதிப்பும் ஏற்படவில்லை என்று கூறி தனது உரையை முடித்துக் கொண்டார்.

4. **<u>திரு. சங்கர், அரசாணிப்பாளையம் கிராமம்</u>**

இவர் கூறுகையில், இந்த குவாரியால் எங்கள் ஊருக்கு எந்த பாதிப்பும் ஏற்படவில்லை. எனவே இந்த குவாரி அமைப்பதில் எங்களுக்கு முழு சம்மதம் என்று குவாரி அமைவதற்கு தனது **ஆதரவை தெரிவித்து** உரையை முடித்துக் கொண்டார்.

5. **<u>திரு. திருநாவுக்கரசு, அரசாணிப்பாளையம் கிராமம்</u>**

இவர் கூறுகையில், இந்த குவாரி அமைவதால் 200 க்கும் மேற்பட்ட குடும்பங்களின் வாழ்வாதாரம் மேம்படுகின்றன. எனவே, இந்த குவாரி அமைவதில் எங்களுக்கு மகிழ்ச்சி என்று இந்த குவாரி அமைவதற்கு **தனது ஆதரவை** தெரிவித்து உரையை முடித்துக் கொண்டார்.

6. **<u>திரு. மோகன், அரசாணிப்பாளையம் கிராமம்</u>**

இவர் கூறுகையில், இந்த குவாரி அமைவதால் எங்கள் ஊர் மக்களுக்கு வேலை வாய்ப்புகள் கிடைத்துள்ளன பேருந்து வசதி கிடைத்துள்ளன பல நன்மைகள் நிகழ்ந்துள்ளன எனவே இந்த குவாரி அமைவதில் எங்களுக்கு

மகிழ்ச்சி என்று குவாரி அமைவதற்கு **தனது ஆதரவை தெரிவித்து** தனது உரையை முடித்துக் கொண்டார்.

7. **<u>திருமதி. ராணி, அரசாணிப்பாளையம் கிராமம்</u>**

இவர் கூறுகையில், இந்த குவாரி அமைவதில் எங்களுக்கு எந்தவித ஆட்சபனையும் இல்லை என்று குவாரி அமைவதற்கு **தனது ஆதரவை தெரிவித்து** உரையை முடித்துக் கொண்டார்.

8. **<u>திருமதி. விஜயா, அரசாணிப்பாளையம் கிராமம்</u>**

இவர் கூறுகையில், நான் 15 ஆண்டுகளாக இந்த குவாரியில் வேலை . செய்து வருகிறேன்; இந்த குவாரி உரிமையாளர் எங்களுக்கு செய்த நன்மைகள் பல; எங்கள் குழந்தைகள் இன்று பள்ளி சென்று படிக்கின்றனர் என்றால் அதற்கு காரணம் இந்த குவாரி உரிமையாளர். இந்த குவாரியால் எங்கள் அன்றாட வாழ்க்கைக்கு எந்தவிதமான பாதிப்பும் இல்லை என்று குவாரி அமைவதற்கு **தனது ஆதரவை** தெரிவித்து உரையை முடித்துக் கொண்டார்.

9. **<u>திரு. விஷால் குமார், அரசாணிப்பாளையம் கிராமம்</u>**

இவர் கூறுகையில், எங்களைப் போல் வேலையில்லாமல் திண்டாடும் எத்தனையோ இளைஞர்களுக்கு இந்த குவாரி வேலைவாய்ப்பை ஏற்படுத்தி கொடுத்திருக்கிறது; உணவுக்கே வழி இல்லாமல் அல்லல்படும் எத்தனையோ குடும்பங்கள் இந்த குவாரியால் பிழைத்திருக்கின்றன. மேலும் எங்கள் கிராமத்திற்கு இந்த குவாரி பல்வேறு வசதிகளை செய்து கொடுத்திருக்கிறது. எனவே இந்த குவாரி அமைவதில் எங்களுக்கு எந்தவித ஆட்சபனையும் இல்லை என்று குவாரி அமைவதற்கு தனது **ஆதரவை தெரிவித்து** உரையை முடித்துக் கொண்டார்.

10. **<u>திருமதி. அலமேலு, அரசாணிப்பாளையம் கிராமம்</u>**

இவர் கூறுகையில், நான் 15 ஆண்டுகளாக இந்த குவாரியில் பணிபுரிந்து வருகிறேன். எங்கள் குடும்பத்தின் பொருளாதாரம் இந்த குவாரியால் மேம்பட்டு

உள்ளது. எனவே இந்த குவாரியை நான் வரவேற்கிறேன் என்று குவாரி அமைவதற்கு **தனது ஆதரவை தெரிவித்து** உரையை முடித்துக் கொண்டார்.

**11. திரு. பார்த்திபன், அரசாணிப்பாளையம் கிராமம்**

இவர் கூறுகையில், இந்த குவாரியால் எங்களுக்கு எந்தவித பாதிப்பும் இல்லை. இந்த குவாரி அமைவதற்கு எந்தவித ஆட்சேபனையும் இல்லை என குவாரி அமைவதற்கு **தனது ஆதரவை தெரிவித்து** உரையை முடித்துக் கொண்டார்.

12. **திரு. உமாபதி, சித்தாலப்பாக்கம் கிராமம்**

இவர் கூறுகையில், முன்பு பேசியவர்கள் ஒரு குவாரியில் 200 பேர் வாழ்வாதாராம் அடையமுடியும் என்று கூறினார்கள். ஆனால் இது சாத்தியமற்றது. எங்கள் ஊரான சித்தாலப்பாக்கத்திற்குள் தான் தி/ள். M.N. பாலசுந்தரம், சாதாரண கல் மற்றும் கிராவல் குவாரி அமைந்துள்ளது. இந்த குவாரிக்கு அருகில் 60 ஏக்கர் பரப்பளவில் ஒரு பெரிய ஏரி உள்ளது. சித்தாலப்பாக்கத்தில் அமைந்துள்ள கல்குவாரிகளின் செயல்பாட்டினால் இந்த ஏரி பெரிதும் பாதிப்புக்கு உள்ளாகிறது; இந்த கல்குவாரியால் எங்கள் ஊருக்கு எந்த நன்மையும் கிடைக்கவில்லை; குடிநீர் வசதி இல்லை; சாலைகள் மேம்படுத்தப்படவில்லை; மற்ற கிராமங்களை காட்டிலும் எங்கள் சித்தாலப்பாக்கம் கிராமம் பெரிதும் பாதிப்புக்குள்ளாகிறது. எனவே இந்த குவாரியை அமைப்பதற்கு முன்பு சுற்றுச்சூழல் எவ்வளவு பாதிப்புக்கு உள்ளாகிறது என சரிவர ஆய்வு செய்யாமல் மற்றும் எங்கள் கிராமத்தில் மண் பரிசோதனை செய்யாமல் திட்ட அறிக்கை அளித்துள்ளனர். எனவே மதிப்பிற்குரிய மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் ஆராய்ந்து பிறகு இந்த குவாரி அமைவதற்கு அனுமதி அளிக்க வேண்டும் என்பதை தெரிவித்து தனது உரையை முடித்துக் கொண்டார்.

13. **திரு. சிவா, சித்தாலப்பாக்கம் கிராமம்**

இவர் கூறுகையில், இதற்கு முன்பு பேசியவர் அவருக்கு இந்த குவாரியால் ஏற்பட்ட பாதிப்புகளை பற்றி எடுத்துரைத்தார். ஆனால் இந்த குவாரிக்கு அருகில் என்னுடைய விவசாய நிலம் தான் அமைந்துள்ளது. இந்த குவாரி வருவதால்

எனக்கு எந்த பாதிப்பும் இல்லை. என்னுடைய வயலுக்கு அருகில் உள்ள கிணற்றுக்கு எந்தவித பாதிப்பும் ஏற்படவில்லை என்று கூறி குவாரி அமைவதற்கு தனது ஆதரவை தெரிவித்து உரையை முடித்துக் கொண்டார்.

**கீழ்கண்ட 06 நபர்கள் எழுத்துமூலமாக இக்குவாரி அமைவது குறித்த தங்களின் கருத்துகளை தெரிவித்தனர். இதில் 04 நபர்கள் குவாரி அமைவதில் ஆட்சேபனை இல்லை என கருத்து தெரிவித்துள்ளனர். மீதமுள்ள 02 நபர்கள் குவாரி அமைப்பதற்கு தங்களின் எதிர்ப்பை பதிவு செய்தனர்.**

| வ. எண் | பெயர் மற்றும் ஊர் | கருத்து |
|---|---|---|
| 1 | கிராம பொது மக்கள்,<br>சித்தலப்பாக்கம் மற்றும்<br>அரசாணிப்பாளையம் கிராமம்,<br>திருவண்ணாமலை மாவட்டம். | இத்திட்டத்திற்கு ஆதரவு தெரிவித்துள்ளார் |
| 2 | திரு. S. சாந்தகுமார்,<br>முன்னாள் கிராம<br>ஊராட்சிமன்ற தலைவர்,<br>சுருட்டல் கிராமம்,<br>திருவண்ணாமலை மாவட்டம். | இத்திட்டத்திற்கு ஆதரவு தெரிவித்துள்ளார் |
| 3 | திரு. எம். முத்து ராஜா,<br>இராமநாதபுரம் மாவட்டம். | இத்திட்டத்திற்கு ஆதரவு தெரிவித்துள்ளார் |
| 4 | திரு. எஸ். காஞ்சனா சாரி,<br>ரங்காரெட்டி மாவட்டம்,<br>தெலுங்கானா. | இத்திட்டத்திற்கு ஆதரவு தெரிவித்துள்ளார் |
| 5 | திரு. வி. பெருமாள்,<br>சித்தலப்பாக்கம்கிராமம்,<br>திருவண்ணாமலை மாவட்டம். | இத்திட்டத்திற்கு எதிர்ப்பு தெரிவித்துள்ளார் |
| 6 | திரு. வி. துளசி,<br>சித்தலப்பாக்கம் கிராமம்,<br>திருவண்ணாமலை மாவட்டம். | இத்திட்டத்திற்கு எதிர்ப்பு தெரிவித்துள்ளார் |

பின்னர் கருத்துக்கள் எதுவும் பெறப்படாததால், மாவட்ட ஆட்சியரின் ஒப்புதலுடன் இக்கூட்டத்தில் கலந்து கொண்ட அனைவருக்கும் நன்றி தெரிவித்து கூட்டம் நிறைவு பெறுவதாக மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், திருவண்ணாமலை அவர்கள் அறிவித்தார்.

**<u>இதுதவிர கீழ்கண்ட விவரங்கள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.</u>**

1. பொதுமக்கள் கருத்துக்கேட்பு கூட்ட விவரம் பத்திரிக்கை வெளியீட்டின் நகல் (தமிழ் மற்றும் ஆங்கிலம் நாளேடுகள், நாள். 28.11.2024).
2. துண்டு பிரசுரம் மற்றும் தண்டோரா அறிவிப்பு – கிராம நிர்வாக அலுவலரால் வழங்கப்பட்ட சான்று.
3. பொதுமக்கள் கருத்துக்கேட்பு கூட்டத்திற்கு கலந்து கொண்டர்களின் வருகை பதிவேடு (07 பக்கங்கள் 54 நபர்கள்)
4. பொதுமக்கள் கருத்துக்கேட்பு கூட்டத்தின் குறுந்தகடு (DVD).
5. பொதுமக்கள் கருத்துக்கேட்பு கூட்டத்தின் போது எடுக்கப்பட்ட புகைப்படங்களின் தொகுப்பு.
6. திட்ட நிறுவனத்தாரால் சமர்பிக்கப்பட்ட சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு அறிக்கை மற்றும் திட்ட சுருக்கம் (தமிழ் மற்றும் ஆங்கிலம்).
7. பொதுமக்கள் கருத்துகேட்பு கூட்டத்தில் பெறப்பட்ட 06 மனுக்கள்.

13/1/2025

**மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்,**
**தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,**
**திருவண்ணாமலை**

/1/2025

**மாவட்ட ஆட்சியர்,**
**திருவண்ணாமலை**

(1/6)